பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

07 12 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் அதிகரித்து வருவது வலுவான பொருளாதார வளர்ச்சியின் அடையாளமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மனநலம், நரம்பியல் மருத்துவத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. புற்றுநோய் சிகிச்சையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. உலகக்கோப்பை இறுதி துப்பாக்கிசுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

**<<<<>>>>**

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் அதிகரித்து வருவது வலுவான பொருளாதார வளர்ச்சியின் அடையாளமாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், உலக அளவில் பொருளாதார நிச்சயமற்ற சூழல் மற்றும் பல்வேறு சவால்களுக்கு இடையே இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி சீராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் பணவீக்க விகிதம் கட்டுக்குள் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பின்தங்கிய கிராமப்புற பகுதிகளில் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்ட வரி சீர்திருத்த நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

கப்பல் கட்டுமானம், பாதுகாப்பு தளவாட உற்பத்தி போன்ற துறைகளில் புதிய சாதனைகள் படைக்கப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

அரசின் செயல்பாடுகள் மீதான மக்களின் நம்பிக்கை அதிகரித்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களை மையமாகக் கொண்டு சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<>>>>

மனநலம் மற்றும் நரம்பியல் துறைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் உள்ள மனநலன் மற்றும் நரம்பியல் தேசிய அறிவியல் மையத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

இந்த மையத்தில் 300 படுக்கை வசதிகளுடன் கூடிய அவசர சிகிச்சைக்கான மருத்துவமனை உள்ளிட்ட 2 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

நாள்தோறும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளி நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் 440 கோடி ரூபாய் செலவிலான மருத்துவமனைக் கட்டிடம் கட்டவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்த தேசிய அறிவியல் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொலைமருத்துவ சேவையின் மூலம் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட அழைப்புகளுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதற்கு திருமதி நிர்மலா சீதாராமன் பாராட்டு தெரிவித்தார்.

<<<<>>>>

புற்றுநோய் சிகிச்சையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூரில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 770 படுக்கை வசதி கொண்ட புற்றுநோய் ஆராய்ச்சி மையம் தமிழகத்தில்தான் உள்ளது என்று கூறினார்.

மருத்துவச் செலவைக் குறைக்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் பல்வேறு திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

காஞ்சிபுரத்தில் 324 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவமனையின் கட்டுமானப் பணிகள் விரைவில் நிறைவடையும் என்று அவர் கூறினார்.

மாநில அரசின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 47 லட்சம் குடும்பங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<>>>>

செறிவூட்டப்பட்ட அரிசி கொள்முதலில் மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட புதிய நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு 60 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 34 ஆயிரம் டன் செறிவூட்டப்பட்ட அரிசி கொள்முதல் செய்யப்பட உள்ளதாக அவர் கூறினார்.

இதற்கென ஐந்து ஒப்பந்ததாரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளதை அமைச்சர் சுட்டிக்காட்னார்.

<<<<>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

திருவண்ணாமலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், கூட்டுறவு சங்கங்கள் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு நிறைவேற்றப்படவில்லை என்று கூறினார்.

மக்களின் ஆன்மிக நம்பிக்கைக்கு எதிராக திமுக அரசு செயல்பட்டு வருவதாக அவர் குறை கூறினார்.

அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்று திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஆட்சியர் திருமதி மிருனாளினி கேட்டுக்கொண்டுள்ளார்.

*(Sound Byte – ஆட்சியர் மிருனாளினி - 45 Sec. )*

**<<<<>>>>**

***இருவரிச் செய்திகள்***

ஆர்டிக் பகுதியில் நேட்டோ உறுப்பு நாடுகளின் ராணுவ நடவடிக்கைகள் அதிகரித்து வருவதையடுத்து, ரஷ்யா தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**<<<<>>>>**

ஹாங்காங் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

**<<<<>>>>**

தென் கொரியாவில் பூசன் நகரில் நடைபெற்ற ஊக்கமருந்து பயன்பாட்டை தடுப்பது குறித்த சர்வதேச மாநாடு நடைபெற்றது.

<<<<>>>>

விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டது குறித்து விளக்கம் அளிக்குமாறு இண்டிகோ நிறுவனத்திற்கு மத்திய சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

<<<<>>>>

இந்தியாவின் உண்மையான அடையாளத்தை மீட்டெடுப்பது என்ற தலைப்பிலான புத்தகத்தை இந்திரா காந்தி தேசிய கலைப் பண்பாட்டு மையம் வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாவில், 6 புள்ளி இரண்டு ஏழு கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 2,582 பயனாளிகளுக்கு மாநில அமைச்சர் திரு காந்தி வழங்கினார்.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் திம்மணமுத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி நேரில் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் இருளப்பபுரம் பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் மதுவிலக்கு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

**<<<>>>>**

கொடைக்கானலில் கடற்படை தினத்தையொட்டி போதைப்பொருள் பயன்பாடு இல்லாத இந்தியா குறித்த கடற்படை வீரர்களின் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

**<<<>>>>**

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலில் நடைபெற்ற புதிய தங்கத் தேரின் வெள்ளோட்டம் நேற்று நடைபெற்றது.

**<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை இறுதி துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளது.

தோஹாவில் நேற்று நடைபெற்ற மகளிர் 10 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் சுருச்சி சிங் தங்கப்பதக்கத்தையும், சைனியம் வெள்ளிப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.

<<<<>>>>

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தாவி சர்மா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-18, 21-16, என்ற செட் கணக்கில் ஜப்பானின் ஹினா அகெச்சி-யை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில், இந்தியாவின் ப்ரித்வி கிருஷ்ணமூர்த்தி - சாய் ப்ரதீக் இணை இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, இந்தோனேசியா இணையை வென்றது.

<<<<>>>>

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் ஆடவர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா 47 புள்ளி ஐந்து ஓவரில், 270 ரன் எடுத்து ஆட்டமிழந்தது.

271 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் களமிறங்கிய இந்தியா, 39 புள்ளி ஐந்து ஓவரில் ஒரு விக்கெட்டை மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரில் 2-1 என்ற ஆட்டக்கணக்கில் இந்தியா தொடரை கைப்பற்றியது.

<<<<The End>>>>